**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 30 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டு கடந்த 08 தொடக்கம் 17 ஆண்டுகளாக சபையின் பயன்பாட்டிலிருந்துவரும் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத இரு வாகனங்களின் பெறுமதிகள் கூட்டுமொத்தம் ரூபா 2,670,000 நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) தலைமை அலுவலகக் கட்டடத்தின் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் ஆதனங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டில் வீதிகளுக்கான பெயர் பலகைகளினை விநியோகிப்பதற்காகவும் மற்றும் சனசமூகநிலையம் நிர்மாணிப்பதற்காகவும் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 728,314 தொடர்பில் உரிய நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிராது

தொடர்ந்தும் பெறப்படவேண்டியதாக காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட சனசமூக நன்கொடை ரூபா 160,000 நாளதுவரை உரிய நிலையங்களுக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிராமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**1.3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 140 | | புதிய வரி மதிப்பீடொன்றைத் தயாரிப்பதற்காக ஏதேனும் பிரதேச சபை எல்லைகளினுள் உள்ள வீடு கட்டிடம் காணி அத்துடன் சிறுமனை என்பன ஒவ்வொன்றினதும் ஆண்டுப் பெறுமானம் பிரதான விலைமதிப்பீட்டாளரால் அல்லது உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் பிரதேச சபையால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் வரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம். | 107,500 | 09 உத்தியோகத்தர்களிடம் பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 67,689,361 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 88,557,121 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 596,560 | 892,747 | 555,195 | 5,388,509 | 599,850 | - | 626,375 | 5,245,770 |
| (ii) | வாடகைகள் | 18,811,450 | - | 20,774,317 | 329,575 | 14,060,970 | - | 15,475,850 | 329,575 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,968,500 | - | 2,425,256 | - | 1,807,750 | - | 2,069,960 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 53,478,250 | - | 75,150,197 | 33,317 | 49,027,170 | - | 122,950,226 | 33,317 |
| | | **74,854,760** | **892,747** | **98,904,965** | **5,751,401** | **65,495,740** | - | **141,122,411** | **5,608,662** |

### 2.2.2 வீதவரிகள்

கூட்டுமொத்தம் ரூபா 5,388,509 பெறுமதியான ஆதனவரி நிலுவைகளினை அறவீடு செய்வதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

**வியாபாரங்களின் உரிமைத்துவம் மீதான குத்தகை**

இறைச்சிக்கடை குத்தகை நிலுவை மற்றும் தண்டம் என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 324,175 அறவிடப்பட்டிருக்க கடந்த 05 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 8,082,550 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 36,580,526 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

சபைநிதி மூலம் மேற்கொள்வதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 16.9 மில்லியன் மதிப்பீடு கொண்ட இரு மூலதன வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன.

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 17 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்திருந்தன.

(ஆ) **ஊழியர் கடன்கள்**

சேவையிலிருந்து இளைப்பாற்றப்பட்டிருந்த அலுவலரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இடர்கடன் மற்றும் விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 17,062 கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

சபையின் புத்தூர் உப அலுவலக ஆதனவரி இடாப்பு 1995 ஆம் ஆண்டில் அழிவடைந்துள்ளதுடன் நாளதுவரை இடாப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத்தவறியமை

சபையினது இரண்டு சில்லு உழவு இயந்திரமொன்று 05 வருடங்களுக்கு மேலாக திருத்தப்பட்டிருக்காமையால் தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 41,365 தொடக்கம் ரூபா 13,368,956 அல்லது 07 சதவீதம் தொடக்கம் 28 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 2,529 தொடக்கம் ரூபா 12,176,002 அல்லது 01 சதவீதம் தொடக்கம் 21 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| கணக்கீடு | காணி விற்பனை வரிப் பதிவேடு நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை. |